சிவமயம்

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்
ARUL MIGU THURKADEVI HINDU SOCIETY (BC)
7468 Edmonds St, Burnaby, V3N 1B2. Tel: (604) 521-3472
Registered Charity # 87003 9229 RR001

# நவராத்திரி விழா விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 4ம்திகதி முதல் புரட்டாதி மாதம் 13ம் திகதி வரை (20-09-2017 முதல் 29-09-2017 வரை) நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. மக்களின் முக்கிய தேவைகளை நிறைவு செய்ய, உலகமாதாவாகிய பராசக்தியை விசேடமாக வழிபாடு செய்யும் புண்ணியகாலம் நவராத்திரியாகும். துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய சக்திகளுக்கு விசேட பூசைகள் நடைபெறும். துர்க்கை வீரத்தையும், இலட்சுமி செல்வத்தையும், சரஸ்வதி கல்வி ஞானத்தையும் அருளும் சக்திகளாகும். பக்த மெய்யன்பர்கள் நவராத்திரி விழாவில் கலந்து கொண்டு அன்னையின் அருளைப்பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

20-09-2017 தொடக்கம் 22-09-2017 வரை **துர்க்கா பூசை**

23-09-2017 தொடக்கம் 25-09-2017 வரை **இலட்சுமி பூசை**

26-09-2017 தொடக்கம் 28-09-1017 வரை **சரஸ்வதி பூசை**

## 29-09-2017 விஜயதசமி

## நிகழ்ச்சி நிரல்

19-09-2017 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கணபதிஹோமம்.

20-09-2017 புதன்கிழமை தொடக்கம் 28-09-2017 வியாழக்கிழமை வரை மாலை 4.30 மணிக்கு நவகலச அபிஷேகமும், இரவு 7.00 மணிக்கு விசேடபூசையும் நடைபெறும்.

29-09-2017 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணிப்பூசையைத் தொடர்ந்து வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்) இடம்பெறும்.
இரவு 6.30 மணிப்பூசையைத் தொடர்ந்து மானம்பூ உற்சவமும், (வன்னி வாழைவெட்டு) பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறும்.

ஆலய நிர்வாகசபையினர்.